நீர்வளத்துறை

அனுப்புநர்

பொறி.க.அருள்அழகன்,பி.இ,
செயற்பொறியாளர்,நீவது,
பவானிசாகர் அணைக்கோட்டம்,
பவானிசாகர் – 638 451.

பெறுநர்

திரு.N.காந்தி பிரகாஷ்,
த/பெநடராஜ், எண்.79,
மத்திப்பாளையம்,
தென்கரை,
கோயம்புத்தூர்-641101.

கடித எண்.வப / இவஅ.2 / கோ.73 / 129 அம் / 2023 / நாள். 28-02-2023

அய்யா,

பொருள்: அணுகுபாலம் – கோயம்புத்தூர் மாவட்டம் – பேரூர் வட்டம் – கலிக்கநாயக்கன்பாளையம் கிராமம் – திரு.N.காந்தி பிரகாஷ் என்பவருக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்.752/5A, 755, 756, 760/1, 761/1-க்கு விவசாய பூமிகளுக்கு செல்ல க.ச.எண்.670-ல் உள்ள சித்திரைச்சாவடி வாய்க்காலின் குறுக்கே அணுகுபாலம் அமைக்க அனுமதி கோரிய மனு – அனுமதி வழங்குதல்– தொடர்பாக.

பார்வை:

1. திரு.N.காந்தி பிரகாஷ், த/பெநடராஜ், எண்.79, மத்திப்பாளையம், தென்கரை, கோயம்புத்தூர்-641101 அவர்களின் விண்ணப்பம் நாள்.12.01.2023. (இவ்வலுவலகத்தில் கிடைக்கப்பெற்ற நாள்.23.01.2023).
2. உதவிசெயற்பொறியாளர்,நீவது, பாசன உபகோட்டம், கோயம்புத்தூர் அவர்களின் கடித எண். கோ.58 / 2022 / நாள்.31.01.2023 (இவ்வலுவலகத்தில் கிடைக்கப்பெற்ற நாள்.01.02.2023).

****

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், கலிக்கநாயக்கன்பாளையம் கிராமத்தில் திரு.N.காந்தி பிரகாஷ் என்பவருக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்.752/5A, 755, 756, 760/1, 761/1-க்கு விவசாய பூமிகளுக்கு செல்ல க.ச.எண்.670-ல் உள்ள சித்திரைச்சாவடி வாய்க்காலின் குறுக்கே 9.15 மீ நீளத்திலும், 5.00 மீ அகலத்திலும் மற்றும் 3.00 மீ உயரத்திலும் அணுகுபாலம் அமைக்க பார்வை 1-ல் காணும் தங்களது கோரிக்கையின் அடிப்படையிலும், பார்வை 2-ல் காணும் உதவிசெயற்பொறியாளர்,நீவது, பாசன உபகோட்டம், கோயம்புத்தூர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையிலும் கீழ்க்கண்ட பொது நிபந்தனைகளின் அடிப்படையில் இத்துறையின் அனுமதி வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1. கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், கலிக்கநாயக்கன்பாளையம் கிராமம் க.ச.எண்.670-ல் உள்ள சித்திரைச்சாவடி வாய்க்காலின் குறுக்கே 9.15 மீட்டர் நீளம், 5.00 மீட்டர் அகலம் மற்றும் 3.00 மீட்டர் உயரமுள்ள அளவுகளில் 1 கண்ணுடன் கூடிய அணுகுபாலம் மட்டுமே கட்டப்பட வேண்டும்.
2. அணுகுபாலம் அமையவுள்ள சித்திரைச்சாவடி வாய்க்காலின் எல்லையை இத்துறை அலுவலர்கள் முன்னிலையில் நிலஅளவை செய்து எல்லைக்கற்கள் பதிக்கப்பட

வேண்டும். அளவீடு செய்யப்பட்டு எல்லை கற்கள் பதிக்கப்பட்ட பின்னரே பாலம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. அணுகுபாலம் அமைக்கும் பணியானது இத்துறை அலுவலர்களின் மேற்பார்வையில் மேற்கொள்ள வேண்டும்.
4. அணுகுபாலத்தின் வடிவமைப்பு மற்றும் வரைபடங்கள் இத்துறையின் ஒப்புதல் பெறாமல் வழங்கப்பட்ட தடையின்மைச்சான்றை பயன்படுத்தி கட்டுமான பணிகள் ஏதும் மேற்கொள்ள கூடாது.
5. சித்திரைச்சாவடி வாய்க்காலில் செல்லும் நீரோட்டத்திற்கு தடை ஏற்படுத்தும் வகையில் ஆக்கிரமிப்புகளோ அல்லது கட்டுமான பொருட்களை கொட்டியோ தடை ஏதும் ஏற்படுத்தக்கூடாது.
6. இவ்வனுமதியானது கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், கலிக்கநாயக்கன்பாளையம் கிராமம் க.ச.எண்.670-ல் நீர்வளத்துறையின் பராமரிப்பில் உள்ள சித்திரைச்சாவடி வாய்க்காலின் குறுக்கே நீர்வளத்துறை அனுமதி வழங்கிய இடத்தில் மட்டுமே அணுகுபாலம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.
7. பாலம் கட்ட உத்தேசிக்கப்பட்ட இடத்தை தாங்கள் எந்த வகையிலும் சொந்தம் கொள்ளக்கூடாது. பாலம் கட்டும் இடத்தில் எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
8. பொதுமக்களுக்கு எவ்வித தடங்களின்றி பாலம் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
9. மேற்கண்ட நிபந்தனைகள் மீறப்படும் பட்சத்தில் இத்துறையிலிருந்து வழங்கப்படவுள்ள அனுமதியை இரத்து செய்ய இத்துறைக்கு முழு உரிமை உள்ளது. மேற்படி அனுமதி இரத்து செய்யப்படும் பட்சத்தில் நீதிமன்றம் செல்லக்கூடாது.
10. தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் எவையேனும் போலியானவை என பிற்காலத்தில் தெரியவந்தால் இத்துறை மூலம் வழங்கப்படவுள்ள அனுமதி இரத்து செய்ய பரிந்துரை செய்யப்படும்.
11. பாலம் கட்டப்பட்ட இடம் பிற்காலத்தில் அரசிற்கு தேவைப்படும் பட்சத்தில் பாலத்தை அப்புறப்படுத்த அரசிற்கு முழு உரிமை உள்ளது.
12. தாங்கள் மேற்கண்ட 11 (பதினொரு) நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவதாக ரூ.100/- மதிப்புள்ள பதிவுத்துறை முத்திரைத்தாளில் உறுதிமொழி எழுதி கையொப்பமிட்டு இருநபர்கள் சாட்சி கையொப்பமுடன் இத்துறைக்கு சம்மதக் கடிதம் வழங்கிட வேண்டும்.

செயற்பொறியாளர்,நீவது,
பவானிசாகர் அணைக்கோட்டம்,
பவானிசாகர் - 638 451.

28/2/23